இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 19-08-2025

# மோடியைக் காப்பாற்றுமா ஆர்.எஸ்.எஸ்.?

இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைத்து விட்டு – ஆர்.எஸ்.எஸ். அமைப்பைப் புகழ்ந்து தள்ளி இருக்கிறார் பிரதமர் மோடி. அவரது நோக்கத்தை நம்மை விட ஆர்.எஸ்.எஸ்., அமைப்பு நன்கு அறியும்.

**75 வயதானால் பதவிகளை விட்டு விலகி விட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சொல்லி வருகிறது. அந்த அமைப்பின் தலைவர் மோகன் பகவத் அதனை அடிக்கடி நினைவூட்டி வருகிறார். அடுத்த மாதத்துடன் பிரதமர் மோடியும் 75 ஆவது வயதை நிறைவு செய்கிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் படி, அவரும் பதவி விலகியாக வேண்டும். ஆனால் அவருக்கு விருப்பம் இல்லை. எதைச் சொல்லி அத்வானியையும், முரளிமனோகர் ஜோஷியையும் காவு வாங்கினாரோ, அதுவே இவருக்கு எதிராக வந்து நிற்கிறது. இந்த நிலையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தயவு மோடிக்கு இப்போது அவசர அவசியம் ஆகி விட்டது.**

அடுத்ததாக மோடியும், அமித்ஷாவும் தனித்து இயங்குவதை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு விரும்பவில்லை. எனவே, பா.ஜ.க.வை தனது முழுக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள நினைக்கிறது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு. பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைவராக தான் சொல்பவர் தான் வரவேண்டும் என்று அந்த அமைப்பு விரும்புகிறது. அவர்கள் சொல்லும் நபரை ஏற்றுக் கொள்ள இவர்கள் இருவரும் மறுக்கிறார்கள். கைக்கு அடக்கமானவரை இவர்கள் இருவரும் நுழைக்கப் பார்க்கிறார்கள். ஆனால் ஆர்.எஸ்.எஸ். தனது ஆளை உட்கார வைக்கத் துடிக்கிறது. இதுவும் மோதலாக மாறிக் கொண்டு இருக்கிறது.

இவற்றில் இருந்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பை சமாதானம் செய்வதற்குத் தான் கடந்த மார்ச் மாதம் அந்த அமைப்பின் தலைமையகத்துக்குச் சென்றார் பிரதமர் மோடி. இப்போது வெளிப்படையாக பாராட்டி பேசி இருக்கிறார்.

இது அவர்களது உட்கட்சி மோதல். **அதற்காக தேசியக் கொடியை ஏற்றி வைத்து விட்டு, 'இந்த தேசத்தை ஆர்.எஸ்.எஸ். அமைப்புதான் கட்டி எழுப்பியது' என்றா பேசுவது?**

"இந்த நாடு அரசாங்கங்களால் மட்டும் கட்டமைக்கப் படவில்லை. நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நிறுவப்பட்டது. தேசத்துக்கான ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இந்த 100 ஆண்டுகால சேவை ஒரு பெருமைமிக்க, பொன்னான அத்தியாயத்தை உருவாக்குகிறது. தேசத்தைக் கட்டி எழுப்ப அவர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர். நூற்றாண்டு கால பயணத்திற்கு பங்களித்த அனைத்து ஸ்வயம் சேவகர்களையும் நான் வணங்குகிறேன். இது எங்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும்" என்று பேசி இருக்கிறார் பிரதமர் மோடி.

* 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய மேதாவிகளுக்கு மனுஸ்மிருதி தெரியவில்லை' என்று எழுதியவர் கோல்வார்க்கர். "மனு தர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலமைப்பு சட்டம் வகுக்கப்பட வேண்டும்" என்று ஆர்.எஸ். எஸ். தலைவர்களில் ஒருவரான சுதர்சன் சொன்னார்.

* இந்தியாவின் அரசியல் நிர்ணய சபையானது மூவர்ணக் கொடியை இந்தியாவின் தேசியக் கொடியாக அறிவித்த போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதனை ஏற்கவில்லை.

* இந்துக்களும் இசுலாமியர்களும் இணைந்து பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடுவதை – இது போன்ற கூட்டு தேசிய நடவடிக்கைகளை எதிர்த்தவர்கள் இவர்கள். 'வேர் வரை செல்லும் வேறுபாடுகள் கொண்ட இனங்களும் கலாச்சாரங்களும் ஒன்றுபட்ட முழுமையாக ஒன்றிணைக்கப்படுவது முற்றிலும் இயலாத ஒன்று என்பதை ஜெர்மனி நமக்குக் காட்டியுள்ளது" என்று கோல்வார்க்கர் சொன்னது இதனைத்தான்.

* ஜனநாயகம் என்பதையே மேலை நாட்டுக் கருத்தாக்கம் என்று நினைக்கக் கூடியவர்கள் இவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்களது சிந்தனையில் உருவாக்கப்படும் சட்டங்கள் ஆகியவற்றுக்கு மரியாதை தராமல் 'ஏக சாலக் அனுவர்தித்வா' என்று சொல்லப்படும் ஒற்றைத் தலைவரின் அதிகாரத்துக்கு கேள்விக்கு இடமின்றி அடிபணியும் கொள்கையை அரசியல் – ஆட்சியியல் கோட்பாடாக மாற்றுவதுதான் இவர்களது நடைமுறையாகும்.

* 'பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது மட்டுமே தேசப்பற்று ஆகாது' என்றும், 'தேசியவாதம் ஆகாது' என்றும் சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் கோல்வார்க்கர். ஒத்துழையாமை இயக்கத்தையும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தையும் "சட்டத்தை மதிக்க வேண்டியது இல்லை என்ற நினைப்பை உருவாக்கிய இயக்கம்" என்று சொன்னவரும் அவர்தான்.

* சாதிப் பாகுபாட்டை முழுக்க முழுக்க நியாயப்படுத்தும் அமைப்பு இது. சாதிப் பிரிவு என்பதையே 'வர்ண வியாவஸ்தா' என்று சொல்லிக் கொள்வார்கள். சாதி அமைப்பு முறைதான் இந்தியாவைக் காப்பாற்றுவது என்ற கொள்கை கொண்டவர்கள் இவர்கள். 'சாதி அமைப்பு முறையானது சமூகத்தில் ஒற்றுமையைக் காப்பதற்கே உதவி செய்திருக்கிறது' என்று சொன்னவர் கோல்வார்க்கர்.

* சமஸ்கிருதம்தான் ஆட்சிமொழியாக வரவேண்டும் என்பதை வலியுறுத்தும் அமைப்பு இது. அதற்கு முன்னதாக இந்தியை ஆட்சி மொழியாக ஆக்கச் சொல்லும் அமைப்பு இது. மொழி ஆதிக்க வாதிகள்தான் தேசத்தை கட்டமைப்பார்களா?

* அண்ணல் காந்தி கொலைச் சதி குறித்து சியாம் பிரசாத் முகர்ஜிக்கு அன்றைய உள்துறை அமைச்சர் படேல் எழுதிய கடிதத்தில், "காந்தியைக் கொலை செய்ய சதி செய்ததில் மகாசபாவின் தீவிரவாதப் பிரிவு ஈடுபட்டிருக்கிறது என்பதில் என் மனதுக்கு எட்டியவரை எந்த சந்தேகமும் இல்லை. காலங்கள் கடந்து போகப் போக ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் இன்னும் அதிகரித்த அளவில் கட்டுப்பாடுகளை மீறுவதும் அதுபோல சீர்குலைவு நடவடிக்கைகளை அதிகப்படுத்துவதையும் நடத்தி வருகிறது" என்று குற்றம் சாட்டினார். இப்படிச் சொன்னவர் படேல். இவர்கள்தான் தேசத்தை கட்டமைத்தவர்களா?

**இத்தகைய ஆர்.எஸ்.எஸ். அமைப்பை காப்பாற்ற நினைக்கிறார் பிரதமர் மோடி. ஆனால் அவர்கள் இவரைக் காப்பாற்றுவார்களா?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.8.2025) நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலம் குறித்து விசாரித்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உள்ளார்.

### முன்னாள் அமைச்சர் அ.ரகுமான்கான் எழுதிய நூல்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிடுகிறார்! அமைச்சர் துரைமுருகன் பெற்றுக்கொள்கிறார்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றுப் பேசுகிறார்!

சென்னை, ஆக. 19-

சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் இன்று (ஆகஸ்ட் 19ம் தேதி – செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணியளவில் மறைந்த கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அ.இரகுமான்கான் எழுதிய 5 நூல்கள் மற்றும் அவரது சட்டமன்றப் பேருரைகள் அடங்கிய 'இடி முழக்கம் இரகுமான் கான்' நூலினை கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிடுகிறார்.

இந்நிகழ்வுக்கு, துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார்.

1977 முதல் 1987 ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கலைஞரின் பாசறைத் தளபதியாக விளங்கிய இரகுமான்கான் அவர்களின் 'சட்டமன்ற உரைகள்' மற்றும் முரசொலி கட்டுரைகளின் தொகுப்பான 'நியாயங்களின் பயணம்', கவிதை நூல்களான 'மௌனமாய் உறங்கும் பனித்துளிகள்', 'உலகமறியா தாஜ்மஹால்', பூ பூக்கும் இலையுதிர்காலம் மற்றும் வானம் பார்க்காத நட்சத்திரங்கள் உள்ளிட்ட நூல்களை கழகத் தலைவர் – முதல்வர் அவர்கள் வெளியிட கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

இந்நிகழ்வில், அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள், பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, இரகுமான்கான் அவர்களின் குடும்பத்தினர் சார்பாக அவரது மகனும், கழக சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவின் செயலாளருமான டாக்டர். அ.சுபேர் கான் எம்.எஸ் (ஆர்த்தோ) நன்றியுரை ஆற்றுகிறார்.

### பீகார் வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் உள்ள

# தேர்தல் ஆணைய நடைமுறை தோல்விகளை உச்சநீதிமன்றம் அம்பலப்படுத்தி உள்ளது!

## 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக. 19 -

பீகார் வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் உள்ள தேர்தல் ஆணையத்தின் நடைமுறை தோல்விகளை உச்சநீதிமன்றத் தலையீடு அம்பலப்படுத்தி உள்ளதாக 'தி இந்து' நாளிதழ் (18.8.2025) தலையங்கம் வெளியிட்டுள்ளது.

'தி இந்து' வெளியிட்டுள்ள தலையங்கத்தில்,

பீகார் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்களையும், அதற்கான காரணங்களையும் வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது, தேர்தல் ஆணையத்தின் மீதான கடுமையான நடவடிக்கையாகக் கருதப்பட வேண்டும் என்றும், வாக்காளர்களுக்கு உள்ள இயற்கை நீதியின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றுமாறு தேர்தல் ஆணையத்தை நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் உள்ள முக்கிய குறைபாடுகளையும், அதை செயல்படுத்துவதில் தேர்தல் ஆணையத்தின் அவசரம் மற்றும் ஆணவத்தை சுட்டிக்காட்டுவதாக உள்ளதாகவும் இத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



THE HINDU

**Roll recall**

The Supreme Court's intervention highlights the ECI's procedural failures

In what must be seen as a rap on the knuckles of the Election Commission of India (ECI), the Supreme Court of India ordered it to publish the names of 65 lakh voters excluded from Bihar's draft electoral roll, and the reasons, following the Special Intensive Revision (SIR) exercise. That it required the Court to compel the ECI to follow the basic principles of natural justice for these voters underscores the pressing lacunae in the institution's conduct of the SIR and the presumptuous and hasty manner of its implementation. There has been no consolidated list of the excluded electors whose names, the ECI claims, have been removed because they have died, or are untraceable or have fake/duplicate entries. No reasons have been provided against each name. Data analysed by The Hindu and ground

இறந்தவர்கள், வேறு இடங்களுக்கு சென்று விட்டவர்கள், இரட்டைப் பதிவுகள் உள்ளிட்ட காரணங்களுக்கான 65 லட்சம் பேர் நீக்கப்பட்டதாக கூறும் தேர்தல் ஆணையம், விலக்கப்பட்ட வாக்காளர்களின் ஒருங்கிணைந்த பட்டியல் எதையும் வெளியிடவில்லை என்றும் 'தி இந்து' தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

நீக்கப்பட்ட ஒவ்வொரு பெயருக்குமான காரணங்கள் வெளியிடப்படவில்லை என்பதுடன், வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து தனது செய்தியாளர்கள் நடத்திய கள ஆய்வுகளில் ஏராளமாக முரண்பாடுகள் இருந்ததாகவும் அது தெரிவித்துள்ளது.

வேலைகளுக்காக ஆண்கள் அதிகம் வெளியூர்களுக்கு செல்வது வழக்கம் என்ற நிலையில், இடம் பெயர்ந்தவர் பட்டியலில் ஆண்களை விட பெண்கள் அதிகம் உள்ளதும், உயிருடன் இருக்கும் பலரது பெயர்கள் இறந்தவர்கள் பட்டியலில் உள்ளதும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், கடந்த ஜனவரி மாதம் நடத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தீவிர திருத்தம் சட்டப்படி செல்லுமா என்பதை உச்சநீதிமன்றம் தீர்மானிக்க உள்ளதாகவும் இத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்யும் 11 ஆவணங்களில் நாடு முழுவதும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆதார் மற்றும் ரேஷன் அட்டைகள் இடம்பெறவில்லை என்பதற்கு தேர்தல் ஆணையம் அளித்த விளக்கத்தை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை என்றும், இதனால், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் ஆதார எண்ணுடன் மீண்டும் விண்ணப்பிக்க உச்சநீதிமன்றம் வாய்ப்பளித்துள்ளது என்றும் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை இந்திய ஜனநாயகத்தின் அடிப்படையாக இருந்து வருவதை சுட்டிக்காட்டி உள்ள 'தி இந்து' தலையங்கம், பீகார் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் குறித்து உச்சநீதிமன்றம் பிறப்பிக்க உள்ள உத்தரவுகளும், தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் நாட்டின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு குறித்த சந்தேகங்களை தீர்க்கும் என எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை எழும்பூரில் உள்ள பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களை நேற்று (18.08.2025 – திங்கள்கிழமை) இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்கள் சந்தித்துப் பேசினார். அப்போது தமிழக அரசின் 'தகைசால் தமிழர்' விருது பெற்றதற்கு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது சென்னை வடக்கு எஸ்.டி.யூ. மாவட்டச் செயலாளர் முஹம்மது ரபி, மணிச்சுடர் ஊடகவியலாளர் திருச்சி எம். கே.ஷாகுல் ஹமீது ஆகியோர் உடன் இருந்தார்கள்.